DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

Sessions CASE No : 126/2016

Deposition of Witness for : P.W.21

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | உதயகுமார் | Calling | |
| Father's Name | : | சண்முகம் | Taluk | : |
| Age | : | 36 | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 14.08.2024.

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது உடுமலைப்பேட்டை தாலுக்கா குறிச்சிக்கோட்டையில் குடியிருந்து JCB ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 07.02.2015 அன்று காலை சுமார் 6.30 மணிக்கு குறிச்சிகோட்டையில் இருந்து வண்டி வேலைக்காக நானும், அ.சா.11 வீரக்குமாரும் இருசக்கரவாகனத்தில் தாராபுரம் சென்றபோது, துங்காவியில் போலீசார் இருசக்கவாகனங்களை சோதனை செய்துகொண்டிருந்தார்கள். எங்களுக்கு முன்னர் பதிவு எண் TN 41 P 6145 எண்ணுடைய Bajaj CD100 இருசக்கரவாகனம் சென்றுகொண்டிருந்தது. அதில் ஒரு 1ஆம் எதிரி சேகர் இருந்தார். அவர் போலீசாரை கண்டவுடன் அவர் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தை திருப்பியபோது, அந்த இருசக்கரவாகனம் கீழே விழுந்துவிட்டது. கீழே விழுந்த இருசக்கரவாகனத்தை அங்கேயே விட்டுவிட்டு ஓடிய போது, போலீசார் அங்குவைத்து 1ஆம் எதிரியை பிடித்தார்கள். அங்கு வைத்து 1ஆம் எதிரியை என் முன்னிலையிலும் என்னுடன் வந்து அ.சா.11 வீரக்குமார் முன்னிலையிலும் போலீசார் விசாரித்த போது, 1ஆம் எதிரியும், 2ஆம் எதிரி கார்த்திக், 3ஆம் எதிரி மகேஷ்வரியும் சேர்ந்து பாலாஜி என்கிற பாலசுப்பிரமணியத்தை கொலை

செய்ததாக கூறினார். என்னிடம் காட்டப்படும் வண்ணபுகைப்படத்தில் உள்ள வாகனத்தில்தான் 1 ஆம் எதிரி வந்தார். அந்த வாகனம் அ.சா.பொ.1 தான். 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் கம்யூட்டரில் பதிவு செய்தனர். துங்காவியில் உள்ள கம்யூட்டர் சென்டரில் போலீசார் பிரிண்ட் எடுத்தனர். அதில் 1 ஆம் எதிரி கையொப்பம் செய்தார். நானும் அ.சா.11 வீரக்குமாரும் சாட்சிகளாக கையொப்பங்கள் செய்தோம். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.22**. பின்னர் போலீசார் TN 41 P 6145 எண்ணுடைய Bajaj CD100 இருசக்கரவாகனத்தை கைப்பற்றுதல் மகஜரில் என் முன்னிலையிலும் அ.சா.11 வீரகுமார் முன்னிலையிலும் கைப்பற்றினர்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் அ.சா.11 வீரக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.23**. பின்னர் 1 ஆம் எதிரி, போலீசாரை கொலை நடந்த இடத்திற்கு அழைத்து சென்றார். நானும் அ.சா.11 வீரக்குமாரும் போலீசார் அழைத்ததின் பேரில் உடன் சென்றோம். 1 ஆம் எதிரி எங்களை வாய்க்கால்மேட்டிற்கு அழைத்து சென்றார். அங்கிருந்து கிழமேற்கில் சின்ன கிளை வாய்க்காலுக்கு ஒட்டியபடி உள்ள தென்னந்தோப்பில் தென்னங்கன்றுக்கு அருகில் அழைத்து சென்றார் அங்குவைத்து எதிரிகள் பாலாஜியை கொலை செய்ததாக 1 ஆம் எதிரி எங்களிடம் சொன்னார். அந்த இடத்தில் இருந்து போலீசார் அ.சா.பொ.8 இரத்தம் படிந்த மண், அ.சா.பொ.9 இரத்தம் படியாத மண்ணை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் அ.சா.11 வீரக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.24**. பின்னர் 1 ஆம் எதிரி சொன்னதின் பேரில் போலீசார்

எங்களையும் 1ஆம் எதிரியையும் பாரையூரில் உள்ள 2ஆம் எதிரியின் கார்த்திக் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். பாலாஜியை கொலை செய்ய பயன்படுத்திய மரக்கைபிடியுடன் கூடிய அ.சா.பொ.6 அரிவாள் ஒன்றையும், அ.சா.பொ.7 நீளமான வெள்ளை நிற கயிறையும் 2ம் எதிரி கார்த்திக் வீட்டின் பாத்ரூமில் இருந்ததை 1ஆம் எதிரி அடையாளம் காட்ட போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் அ.சா.11 வீரக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.25**. பின்னர் 1ஆம் எதிரி கூறியதின் பேரில் போலீசார் 1ஆம் எதிரியுடன் என்னையும், அ.சா.11யும் அழைத்துகொண்டு நல்லாம்பள்ளியில் உள்ள 1ஆம் எதிரியின் வீட்டிற்கு சென்றார்கள். 1ஆம் எதிரியின் வீட்டிற்கு முன்புள்ள புதரில் இருந்து அ.சா.பொ.2 கருப்பு கலர் பேக், அ.சா.பொ.3 டிபன்பாக்ஸ், அ.சா.பொ.4 நீலநிற முழுக்கை சட்டை, அ.சா.பொ.5 அரைக்கை சட்டை ஆகியவற்றை போலீசார் என் முன்னிலையிலும் அ.சா.11 வீரக்குமார் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் அ.சா.11 வீரக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.26**. பின்னர் போலீசார் 1ஆம் எதிரியையும் எங்களையும் அலங்கியம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் என் முன்னிலையிலும் அ.சா.11 வீரக்குமார் முன்னிலையிலும் போலீசாரிடம் 1ஆம் எதிரி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் எதிரி எவ்வித ஒப்புதல்

வாக்குமூலமும் கொடுக்காத சூழ்நிலையில், 1 ஆம் எதிரி, 3 ஆம் எதிரி இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக நான் கற்பனையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரியை எனக்கு தெரியும் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 2 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-Thiru.V.John Mino
IV Additional District and Sessions Judge,
Udumalpet.